நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு

முன்னிலை: **திரு.து.ஹரிராம், பிகாம்,பி.எல்.,**
**நீதித்துறை நடுவர்,திருவையாற**

வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண்.**CC.298 /2021**

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ஆனந்தி | : | ஜாதி | |
| தந்தை /கணவர் பெயர் | சின்னதுரை | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | கடயக்குடி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 50 /2024 |

( எதிரி ஆஜர் )

**<u>நாள் : 08.02.2024</u>**

**முதல் விசாரணை:**

**1)** நான் கடயக்குடியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சின்னதுரை என்பவர் எனது கணவர் ஆவார். கடந்த 19.01.2020 ஆம் தேதியன்று மாலை 04.00 மணி அளவில் நானும், எனது கணவர் மற்றும் எனது மகன் மூவரும் ஸ்கூட்டியில் அடஞ்சூர் சென்றுவிட்டு திரும்பி எங்கள் ஊருக்கு வரும்போது புள்ளவாய்க்கால் அருகே எதிர் திசையில் இரு சக்கர வாகனத்தில் வந்த மூவர் எங்கள்மீது மோதியதில் நாங்கள் கீழே விழுந்துவிட்டோம். அதில் எனக்கு இடது கையிலும், இடுப்பிலும் அடிபட்டுவிட்டது. எனது மகனுக்கு முன்தலையில் அடிபட்டு எலும்பு முறிவு ஏற்பட்டது, மூக்கிலிருந்து இரத்தம் வந்தது. எனது கணவருக்கு கால் இரண்டாக உடைந்துவிட்டது. மேலும் பிறப்பு உறுப்பில் அடிபட்டிருந்தது.

2) அதன் பிறகு ஆம்புலன்ஸ்மூலம் திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு மருத்துவர் அவரை பரிசோதித்துவிட்டு வரும் வழியிலேயே எனது கணவர் இறந்துவிட்டதாக கூறினார். என்னிடம் காட்டப்படும் புகார் மனவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் நாள் அளித்ததுதான். அந்த புகார்

மனு அ.சா.ஆ.1/அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

(ஒம்./-திரு. து.ஹரிராம், பி.காம், பி.எல்.,
நீதித்துறை நடுவர், திருவையாறு)